தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

C.C. No. 12 / 2025

20.08.2025

LW : 23 PW : 21

அய்யப்பன், த/பெ. மணி

மனுவின்பேரில் அரசு சாட்சி 21 மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில்

**குறுக்குவிசாரணை**

எனக்கு பிரிவு 81 விசாரணை அதிகாரி விசாரணைக்காக 10.05.2019 அன்று உத்தரவிடப்பட்டது. அதனை பெற்றுக்கொண்ட தேதி எனக்கு ஞாபகம் இல்லை. உத்தரவினை பெற்றுக்கொண்டேன் என கையெழுத்து செய்து தேதியிடப்படவேண்டும் என்றால் சரிதான். பிரிவு 81 விசாரணை யாருடைய பரிந்துரையின்பேரில் என உத்தரவு பிறப்பிக்கப்படும் என தெரியும். இந்த உத்தரவு யாருடைய புகார் அல்லது பரிந்துரையின்பேரில் பிறப்பிக்கப்பட்டது என்பது குறித்து நான் தெரிந்துகொள்ளவில்லை.

2) அந்த விசாரணை உத்தரவில் 3 மாதகாலத்திற்குள் விசாரணை முடிக்கவேண்டும் என காலம் குறிப்பிட்டிருக்கும் என்றால் சரிதான். அவ்வாறு விசாரணை உரிய காலத்தில் முடிக்கப்படவில்லை என்றால் கூடுதலாக இருமுறை கால நீட்டிப்பு பெற்றுக்கொள்ளலாம் என்றால் சரிதான். இந்த வழக்கில் என்னால் தாக்கல் செய்யப்பட்ட விசாரணை அறிக்கை முதல் 3 மாத காலத்திற்குள் முடிக்கப்படவில்லை என்றால் சரிதான். காலநீட்டிப்பு கேட்டு கடிதம் எழுதி எனக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் ஒருமுறை காலநீட்டிப்பு கேட்டுள்ளேன்.

3) அதன்படி எனக்கு 3 மாத காலநீட்டிப்பு 09.11.2019 வரை வழங்கப்பட்டது. நான் 18.11.2019 அன்று எனது விசாரணை அறிக்கையை தாக்கல் செய்தேன். நான் தாக்கல் செய்த அறிக்கை அலுவலரால் பெற்றுக்கொள்ளப்பட்டது என குறிப்பிட்டு முத்திரையிட்டு கையொப்பமிட்டு பெறப்படும் என்றால் சரிதான்.

நான் எனது அறிக்கையை சரக துணைபதிவாளரிடம் சமர்ப்பிக்கவேண்டும் அதில் அவர் தேதி முத்திரையிட்டு கையொப்பம் செய்ய வேண்டும் என்றால் சரிதான்.

4) என்னுடைய விசாரணை அறிக்கை 18.11.2019 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது இந்நீதிமன்றத்தில் அதசாஆ 69 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதசாஆ 69 ல் என் கையொப்பமிட்டு சமர்ப்பிக்கப்பட்ட நாள் 20.06.2020 என என்னால் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதசாஆ 69 ல் முதல் பக்கத்தில் அலுவலக முத்திரையிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். நான் 4 , 5 விசாரணை அறிக்கை நகல்கள் கொடுப்பதால் இந்த ஆவணத்தில் முத்திரை மட்டும் உள்ளது மற்ற ஆவணங்களில் எதில் கையொப்பம் இருக்கிறது என்று எனக்கு தெரியாது.

5) அந்த அறிக்கையில் தட்டச்சு பிழை இருப்பதாகவும், ஜெராக்ஸ் ஆவணங்கள் தாக்கல் செய்யவும் எனக்கு பணிக்கப்பட்டதால் மீண்டும் அதை 20.06.2020 ல் சரிசெய்து அந்த அறிக்கையை சமர்ப்பித்தேன்.

6) எனக்கு வழங்கப்பட்ட கால அவகாசத்தின்படி எனது விசாரணை அறிக்கையை நான் 10.11.2019 க்குள் தாக்கல் செய்திருக்கவேண்டும் என்றால் விசாரணையை முடிக்கவேண்டும். விசாரணை முடிக்கப்பட்ட பிறகு பிழைகளை சரிசெய்து தாக்கல் செய்ய கூட்டுறவு சட்ட சங்க விதிகளின்படி 10 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறு காலஅவகாசம் கூட்டுறவு சங்க விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் நான் தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

7) கூட்டுறவு சங்க விதிகளின்படி 18.11.2019 ம் தேதிக்குள் விசாரணை முடித்து அறிக்கை தாக்கல் செய்யவேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கில் உரிய காலகெடுவிற்குள் விசாரணைஅறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கூட்டுறவு சங்க விதிகளின் படி கால கெடுவிற்குள் விசாரணை முடித்து அறிக்கை தாக்கல் செய்வில்லை என்பதால் இந்த

வழக்கிற்குரிய விசாரணை அறிக்கை செல்லத்தக்கதல்ல என்றும் முழுமையாக ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

8) நான் எனது சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ள விசாரணை அறிக்கையில் தட்டச்சு பிழை இருப்பதாகவும், ஜெராக்ஸ் ஆவணங்கள் தாக்கல் செய்யவும் எனக்கு பணிக்கப்பட்டதால் மீண்டும் அதை 20.06.2020 ல் சரிசெய்து அந்த அறிக்கையை சமர்ப்பித்தேன் என்பதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பார்வை காலத்தில் அதனை நான் குறிப்பிட்டுள்ளேன்.

9) இந்த விசாரணை அறிக்கை எனக்கு வழங்கப்பட்ட கால கெடுவிலிருந்து 7 மாதங்கள் காலதாமதமாக பின்னிட்டு 20.06.2020 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் அவை பிழையுடையது என்றும் செல்லத்தக்கதல்ல என்றும் சொன்னால் அது சரியல்ல. நான் எனது விசாரணையை தொடங்கிய காலத்தில் ஆஜர் எதிரி பணியில் இருந்தாரா பணிநீக்கத்திலிருந்தாரா அல்லது நிரந்தர பணிநீக்கத்திலிருந்தாரா என்று தெரிந்துகொண்டேனா என்றால் அவர் பணிக்கு வரவில்லை.

10) ஆஜர் எதிரி பணிக்கு வரவில்லை என்பது தற்காலிக பணிநீக்கத்திலிருந்தாரா அல்லது நிரந்தர பணிநீக்கத்திலிருந்தாரா அல்லது விடுப்பு எடுத்திருந்தாரா என்று தெரிந்துகொண்டேனா என்றால் ஆஜர் எதிரி தன்னிச்சையாக பணிக்கு வரவில்லை. இது சம்பந்தமாக எதிரியிடம் விளக்கம் கோரப்பட்டதா என்றால் இல்லை.

11) ஆஜர் எதிரி பணியில் இல்லை என்பதற்கு எனது மேலதிகாரிக்கு தகவல் தெரிவித்தேனா என்றால் எழுத்துபூர்வமாக தகவல் தெரிவிக்கவில்லை, வாய்மொழியாக தகவல் தெரிவித்துள்ளேன். இந்த விவரங்களை எனது விசாரணை அறிக்கையில் எந்த இடத்திலாவது குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

12) நான் சொன்னகாலத்தில் முறையாக எனது விசாரணையை தொடங்கவில்லை என்பதால்தான் எதிரி பணிக்கு வராமல் இருந்த விவரங்களை உயர் அதிகாரிக்கு தெரிவிக்கவில்லை என்றாலும் எனது விசாரணை ஆவணங்களில் பதிவுசெய்யவில்லை என்றாலும் சரியல்ல.

13) அன்புசெல்வி எந்த காலத்திலிருந்து செயலாளராக பொறுப்பேற்றுக்கொண்டார் என்பது குறித்து எனது விசாரணை அறிக்கையில் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. ஒருவர் செயலாளராக பொறுப்பேற்றுக்கொண்டால் அதனை நிர்வாக குழு மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதன்பிறகுதான் செயலாளராக பொறுப்பேற்றுக்கொள்ளவேண்டும் என்றால் சரிதான்.

14) அன்புசெல்வி எந்த காலத்திலிருந்து செயலாளராக பொறுப்பேற்றுக்கொண்டார் என்பதை ஆவணங்களை பார்வையிட்டு எனது விசாரணை அறிக்கையில் பதிவுசெய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் அதற்கான ஆவணங்கள் இருந்தன.

15) நான் சட்டப்படியான முறையான விசாரணையை மேற்கொள்ளவில்லை என்பதால்தான் மேற்படி தகவல்களை நான் பதிவுசெய்யவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி விசாரணைக்காக என்னால் அழைக்கப்பட்டாரா என்ற விவரத்தை நான் பதிவுசெய்துள்ளேனா என்றால் நான் அழைப்பாணை அனுப்பி அதன்பேரில்தான் எதிரியை விசாரித்துள்ளேன்.

16) இந்த வழக்கில் நான் எத்தனைபேரை விசாரணை செய்துள்ளேன் என்றால் எண்ணிக்கை சரியாக தெரியவில்லை. விசாரணைக்கு அழைத்த நபர்களை கடிதம் மூலமாக அல்லது தொலைபேசிமூலமாக அழைத்ததற்கு ஆதார் ஏதேனும் இருக்கிறதா என்றால் அனைவருக்கும் பதிவு தபால் மூலமாக அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. அதற்கான ஆவணங்களை இவ்வழக்கில் சமர்ப்பித்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். நான் ஆவணங்கள் எதையும் கொடுக்கவில்லை என்றாலும் வழக்கிற்கு ஏற்றாற்போல பொய்சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

17) நான் விசாரணைக்காக அழைக்கப்பட்ட நபர்களின் அழைப்பாணையில் எந்தெந்த ஆவணங்களுடன் விசாரணைக்கு வரவேண்டும் என குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. ஒவ்வொரு அழைப்பாணையிலும் குறிப்பிட்டு அனுப்பியுள்ளேன் அதன் நகல் இல்லாமல் இருக்கும்.

18) என்னால் விசாரிக்கப்பட்ட சாட்சிகளிடம் விசாரணை செய்வதை நான் வாக்குமூலமாகதான் பதிவுசெய்துள்ளேன். ஆணையுறுதி ஆவணமாக பதிவுசெய்யவில்லை என்றால் சரிதான். கூட்டுறவு சங்க சட்டவிதிகளின்படி நான் சாட்சிகளின் விசாரணையை ஆணையுறுதி ஆவணமாகதான் பதிவுசெய்யவேண்டும் என்றாலும் ஆனால் வாக்குமூலங்களாக பதிவுசெய்யப்பட்டிருப்பதால் அவை சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

19) நான் எனது விசாரணையை தொடங்கும்போது சங்கத்தின் ஆவணங்கள் அனைத்தையும் அலுவலரிடமிருந்து பெற்றுக்கொண்டு விட்டு ஆய்வுசெய்து அறிக்கை தயார் செய்தபின்னர் சரக துணைபதிவாளர் அலுவலகத்தில் அனைத்து ஆவணங்களும் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான்.

20) என்னால் கூட்டுறவு சங்க அலுவலகத்திலிருந்து ஆவணங்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டபிறகு புதிய ஆவணங்களை கொண்டுதான் சங்க அலுவலகத்தில் செயல்படுத்தப்படவேண்டும் என்றால் சரிதான்.

21) யார் யார் அந்த சங்கத்தில் திடீர் ஆய்வு எப்போது செய்தார்கள் என்ற விவரத்தையும், ஆண்டு தணிக்கை விவரத்தையும் பார்வையிட்டு எனது விசாரணை அறிக்கையில் குறிப்பிடவேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் அதுபோன்று மேற்குறிப்பிட்டவைகளை பார்வையிட்டேனா என்றால் செயலாளரான ஆஜர் எதிரி சரியாக அந்த விவரங்களை முறையாக பதிவுசெய்து வைக்கவில்லை.

22) சங்கத்தில் முறைகேடுகள் நடந்ததாக சொல்லப்படும் காலத்திற்குரிய ஆண்டு தணிக்கை அறிக்கையை பார்வையிட்டேனா என்றால் ஆண்டு தணிக்கை அறிக்கையை சங்கத்தில் முறையாக பராமரிக்கவில்லை அதனால் நான் பார்வையிடவில்லை. திடீர் ஆய்வு மற்றும் ஆண்டு தணிக்கை அறிக்கையை முறையாக சங்கத்தில் பராமரிக்கவில்லை என குறிப்பிட்டு எனது அறிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

23) நான் சரியாக விசாரணை செய்யவில்லை என்பதால்தான் எதிரி முறையாக எந்தஆவணத்தையும் பராமரிக்கவில்லை என பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. திடீர் ஆய்வு அறிக்கை, ஆண்டுதணிக்கை அறிக்கை ஆகியவற்றையும் சரக துணைபதிவாளர், மண்டல துணைபதிவாளர் ஆகியோர் கூட்டுறவு சங்கங்களை திடீர் ஆய்வு மேற்கொண்டு 3 மாதத்திற்கு ஒருமுறை ஆய்வுசெய்யவேண்டும் என்றால் காலஅவகாசம் எனக்கு நினைவில்லை ஆனால் ஆய்வுசெய்யவேண்டும்.

24) நான் ஆண்டுதணிக்கை அறிக்கையை பார்வையிட்டு அதில் எந்த ஒரு குறைகளும் சொல்லப்படவில்லை என்பதை தெரிந்துகொண்டு எதிரிமீது குற்றம் சொல்லவேண்டும் என்பதற்காக அந்த ஆவணங்களை எதிரி முறையாக பராமரிக்கவில்லை என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

25) நான் விசாரணை செய்த நபர்கள் அவர்களது வாக்குமூலத்தில் எதிரியிடம் பணம் கொடுத்ததாகவும், எதிரி அந்த பணத்தை கூட்டுறவு சங்க கணக்கில் வரவுவைக்கவில்லை என்று சொன்னதாகதான் பதிவுசெய்திருக்கிறேன். பணம் கொடுத்ததாக சொன்னது தொடர்பாக சாட்சிகளிடம் ஆதாரம் ஏதேனும் பெற்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் பலர் ஆதாரம் கொடுத்திருக்கிறார்கள், ஒருசிலர் கொடுக்கவில்லை ஆஜர் எதிரி கவிதாவும் பணம் பெற்றதை ஒப்புக்கொண்டார். ஆஜர் எதிரி பணம் பெற்றுக்கொண்டதை ஒப்புக்கொண்டது தொடர்பாக ஏதேனும் ஆதார

ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வாக்குமூலத்தில்தான் சொல்லி கையொப்பமிட்டுள்ளார். ஆவணம் எதுவும் கொடுக்கவில்லை.

26) இந்த வழக்கை பொறுத்தவரை சங்கத்திற்கு வரவேண்டிய தொகையை ஆஜர் எதிரியிடம் கொடுத்ததாகவும் ஆஜர் எதிரி அதை கையாடல் செய்துவிட்டதாகவும்தான் வழக்கு என்றால் சரிதான். சங்கத்திற்குள்ளே பணம் வந்தபிறகு அந்த பணத்தை எடுத்து முறைகேடுகள் செய்ததாக வழக்கு இல்லை என்றால் சரிதான். சங்கத்தில் முறைகேடுகள் நடந்ததாக சொல்லப்படும் காலத்தில் யார் யார் பதிவேடுகளை கையாண்டார்கள் என்பதை தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். சங்கத்தின் ரொக்கம் தொடர்பான வரவு செலவு அனைத்தையும் ஆஜர் எதிரிதான் கையாண்டார் என்பதை தெரிந்துகொண்டேன்.

27) அன்புசெல்வி என்ற எழுத்தர் என்னென்ன ஆவணங்களை கையாண்டார் என்பதை தெரிந்துகொண்டேனா என்றால் அவர் துணை தின பதிவேடு பராமரித்தார் என்றும் செயலாளர் மற்றும் தலைவர் சொல்லும் பணிகளை செய்ததாக எனது விசாரணையில் அன்புசெல்வி சொன்னார். என்னிடம் இருந்த ஆவணங்களை யார் யார் எழுதினார்கள் என்பது குறித்து தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன்.

28) ரொக்கம் தொடர்பான பதிவேடுகளில் எதிரி கவிதாவின் கையொப்பம்தான் உள்ளது அதனை நான் விசாரணையில் தெரிந்துகொண்டேன். ஆஜர் எதிரி பிரசவ எடுப்பு எடுத்திருந்தார் என்றால் சரிதான். அவர் எவ்வளவு காலம் அலுவலகத்திற்கு வரவில்லை என்றும் அந்த காலத்தில் யார் யார் பதிவேடுகளை பராமரித்தார்கள் என தெரிந்துகொண்டேனா என்றால் முறைகேடு நடந்ததாக சொல்லப்படும் காலங்களில் அன்புசெல்விதான் விடுப்பு எடுத்திருந்தார்.

29) ரொக்கம் சம்பந்தமான பதிவேடுகளில் உள்ள எதிரியின் கையெழுத்தை நிருபிக்கும் பொருட்டு கையெழுத்து நிபுணர்களுக்கு அனுப்பிவைக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தேனா என்றால் அவ்வாறு அவசியம் ஏற்படவில்லை. எதிரி அனைத்து குற்றச்சாட்டுக்களையும் ஒப்புக்கொண்டார்.

30) ஆஜர் எதிரியை மட்டுமே குற்றசெயலுக்கு ஆளாக்கவேண்டும் என்பதற்காக அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. விசாரணை முழுவதும் எங்கு நடைபெற்றது என்றால் வலங்கைமான் பஞ்சாயத்து யூனியன் அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்க அலுவலகத்தில் நடந்தது.

31) விசாரணை முடித்து எந்த தேதியில் பதிவேடுகள் சரக துணை பதிவாளரிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் 18.11.2019 ல் ஒப்படைக்கப்பட்டது அதன்பிறகு நகல் எடுப்பதற்காக கேட்டு பெற்று மீண்டும் ஒப்படைக்கப்பட்டது. விசாரணை காலம் முடிந்து பின்வந்த 7 மாதங்களில் எங்கு வைத்து அறிக்கை தயார் செய்தேன் என்றால் தட்டச்சு பிழையை பொறுத்தவரை உதவியாளர் யாரும் இல்லாததால் கடைகளில் கொடுத்து என் முன்னிலையல் தயார் செய்யப்பட்டது.

32) எனது விசாரணை அறிக்கையில் ஆஜர் எதிரிமீது எந்த ஒரு குற்றஈர்ப்பும் வரவில்லை என்பதால் எதிரிமீது குற்ற ஈர்ப்பு வரும் வகையில் பின்னிட்டு காலதாமதமாக ஆலோசித்து தயார் செய்யப்பட்டு எனது அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

33) இந்த வழக்கில் நிர்வாக குழு தலைவராக இருந்தவர் மீது எந்த குற்ற ஈர்ப்பும் இருந்ததா என்றால் சங்க தலைவர் யாரிடம் இருந்தும் பணம் வாங்கியதாக பாதிக்கப்பட்ட உறுப்பினர் யாரும் தலைவரிடம் ரொக்கம் கொடுத்து ஏமாந்தேன் என்று சொல்லவில்லை.

34) கடன்நிலுவையில்லா சான்று கொடுத்ததாக வழக்கில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சங்க உறுப்பினர்களான ஆசிரியர்கள் ஒரு மாவட்டத்திலிருந்து வேறு மாவட்டத்திற்கோ அல்லது வட்டார அளவில் வேறு வட்டாரத்திற்கோ இட மாறுதலாகி செல்லவேண்டும் என்றால் சங்கத்தின் கடன்நிலுவையில்லா சான்று கொடுத்தால்தான் வட்டார கல்வி அலுவலகத்தில் ஆசிரியர்களை விடுவிப்பது வழக்கம்.

35) எனது விசாரணையில் அந்த சங்கத்தில் கடன்நிலுவையில்லா சான்று பெற்று இடமாறுதலாகி சென்ற ஆசிரியர்கள் அங்குள்ள வட்டார கல்வி அலுவலகத்தில் கொடுத்ததற்கான சான்றுகளை வட்டார அலுவலகத்தாரிடம் நான் கடிதம் மூலம் ஆவணங்களை கேட்டு பெற்றேனா என்றால் இல்லை. 4 வருடங்களில் பாதிக்கப்பட்ட நபர்கள் வெவ்வேறு இடங்களில் பணிமாறுதல் பெற்று சென்ற ஆசிரியர்களுக்கு அழைப்பாணை அனுப்பியதன்பேரில் விசாரணைக்கு அவர்கள் முன்னிலையாகி மேற்படி விவரங்களை கூறியதை எதிரி ஒப்புக்கொண்டதால் மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் நான் எடுக்கவில்லை. அவ்வாறு நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

36) நான் கூட்டுறவு சார்பதிவாளராக பணியில் உள்ளேன். இதற்கு முன்பு 2018-2022 வரை கள அலுவலராக வலங்கைமான் வட்டாரத்தில் பணிபுரிந்து வந்தேன். எனது நிர்வாகத்தில் கீழ் இருந்ததுதான் இந்த சங்கம் என்றால் சரிதான். கள அலுவலராக இருந்தபோது 3 மாதத்திற்கு ஒரு முறை இந்த சங்கத்தினை ஆய்வுசெய்து அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

37) இந்த சங்கத்திற்கு நான் ஒவ்வொரு முறையும் முறையாக ஆய்வுசெய்து அறிக்கை அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. சாட்சி தற்போது பிரிவு 81 ஆய்வுக்கு முன்பு கூட்டறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியமளிக்கிறார். அந்த கூட்டறிக்கை நகல் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால்தற்போது என்னிடம் அந்த கூட்டறிக்கை உண்மை நகல் உள்ளது. அது நீதிமன்றத்தில் அரசுதரப்பில்

ஆவணமாக குறியீடு செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டது எதிரிதரப்பு ஆட்சேபணையும் அந்த ஆவணம் **அதசாஆ 88** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

38) முருகநாதன், கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் சங்கத்திற்கு செலுத்தவேண்டிய தொகையினை தலைவர் ஜெயந்தியிடம் செலுத்தினோம் என்று சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல.

39) என்னால் சங்கத்திலிருந்து கைப்பற்றப்பட்ட பதிவேடுகளில் அடித்தல் திருத்தல்கள் உள்ளது என்றால் சரிதான். அது யாரால் திருத்தப்பட்டது எப்போது திருத்தப்பட்டது என்பது குறித்து விசாரணை செய்து வழக்காவணங்களில் பதிவுசெய்யவில்லை என்றால் சரிதான்.

40) அன்புசெல்வின் உறவினர் ஒருவர் மாவட்ட கூட்டுறவு பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரிகிறார் என்றால் அது எனக்கு தெரியாது. நான் வலங்கைமானில் கள அலுவலராக பணிபுரிந்த காலத்தில் முத்துரெங்கன் என்பவர் கூட்டுறவு சார்பதிவாளராக இருந்தார். அவர் அன்புசெல்விக்கு நெருங்கிய உறவினர் என்றால் அது எனக்கு தெரியாது. முத்துரெங்கனின் உறவினரான அன்புசெல்வியை செயலாளராக ஆக்கவேண்டும் என்பதால் எதிரியின்மீது பொய்யாக குற்றச்சாட்டை சுமத்தி அவரை பணியிலிருந்து நீக்க வேண்டும் என்பதற்காக பொய்குற்றச்சாட்டினை எதிரிமீது புனைந்து நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்கண்ட விவரம் எனக்கு தெரியும் என்றாலும் முத்துரெங்கன் எனக்கு உயர் அதிகாரி என்பதால் அவருக்கு சாதகமாக உண்மையை மறைத்து பொய்சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சங்க உறுப்பினர்கள் எதிரியின் வங்கி கணக்கிற்கு பணம் செலுத்தியதாக சொன்ன விவரங்கள் குறித்து வங்கி அலுவலர்களை நான் அழைத்து விசாரணை செய்தேனா என்றால் நான் விசாரிக்கவில்லை. நான் ஆவணங்களை கேட்டதற்கு வங்கி தரப்பில் கொடுக்கவில்லை. அவ்வாறு நான் வங்கியில் கேட்ட ஆவணங்களை எப்போது என்ன ஆவணங்களை கேட்டேன் யாரிடம் கேட்டேன் என்ற விவரங்களை எனது விசாரணையில் பதிவுசெய்யவில்லை என்றால் சரிதான்.

41) எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை என்றாலும் எனது மேல்அதிகாரியின் உத்தரவிற்கு பணிந்து எதிரிமீது குற்ற ஈர்ப்பு வரும்வகையில் பின்னிட்டு காலதாமதமாக அலுவலகத்தில் வைத்து தயார் செய்து தாக்கல் செய்த ஆவணங்களை பொறுத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

C.C. No. 12 / 2025

20.08.2025

LW : 14 PW : 14

ஜெயக்கொடி, க/பெ. ஜெயராமன்.

மனுவின்பேரில் அரசு சாட்சி 14 மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில்

**குறுக்குவிசாரணை**

நான் வலங்கைமான் பஞ்சாயத்து யூனியன் அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் கூட்டுறவு சிக்கனம் மற்றும் கடன் சங்கத்தில் நிர்வாக குழு இயக்குநராக 2012 ஆண்டு முதல் 2022 ம் ஆண்டு வரை இருந்தேன். தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் வந்தபிறகு அவர்கள்தான் சங்கத்தின் நிர்வாக வரவு செலவு முழுவதையும் நிர்வகித்து வந்தனர் என்றால் சரிதான்.

2) வரவினங்கள் மற்றும் செலவினங்கள் முழுவதையும் நிர்வாக குழு உறுப்பினர்களின் ஒப்புதல் பெற்ற பிறகுதான் செயலாளர் நடைமுறை படுத்தவேண்டும் என்றால் சரிதான். நான் இந்த சங்கத்தில் கடன்பட்ட ஒரு உறுப்பினர் என்றால் சரிதான். கடனை திரும்ப செலுத்தும் வழிமுறைகள் பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் கடன்பெற்ற தொகையை சரியான தேதியில் சரியான முறையில் செலுத்தியதற்கான ஆவணங்களை பிரிவு 81 விசாரணை அதிகாரியிடமும் காவல்துறையினரிடமும் சமர்ப்பித்தேன் என்றால் சரிதான்.

3) நான் அந்த ஆவணங்களை போலிசாரிடமும் பிரிவு 81 விசாரணை அதிகாரியிடமும் காண்பித்தேன். ஆனால் அவைகளை அவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை. நான் பெற்ற கடன்தொகையை உரிய தேதிகளில் சங்கத்தில் திருப்பி செலுத்தவில்லை என்றால் தவறு நான் பணத்தை கட்டியுள்ளேன் ஆனால் அவர்கள் வரவுவைக்கவில்லை. நான் சங்கத்திற்கு

செலுத்தவேண்டிய தொகை ரூ.67,400 ஐ வங்கியின் மூலமாக செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு கடன்நிலுவையில்லா சான்றிதழ் வழங்கியது சங்க தலைவர் ஜெயந்தி என்றால் சரிதான்.

4) வங்கி கணக்குகளை ஆய்வுசெய்தபிறகே கடன் நிலுவையில்லை என்ற சான்று எனக்கு வழங்கப்படும் என்றால் சரிதான். நான் கடன் தொகை செலுத்தியதை ஆஜர் எதிரி இயக்குநரிடம் ஒப்புக்கொண்டு செலுத்திவிடுவதாக ஒப்புக்கொண்டார் என்பதற்கு ஆவண ஆதாரங்களை தாக்கல் செய்துள்ளார்களா என்றால் ஆவணம் எதையும் எதிரி எழுதிக்கொடுக்கவில்லை எல்லோர் முன்னிலையிலும் தொகையை கட்டிவிடுவதாக எதிரி சொன்னார் அது தீர்மான புத்தகத்திலும் எழுதப்பட்டுள்ளது. அதை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளார்களா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5) எதிரி எல்லோர் முன்னிலையிலும் ஒப்புக்கொண்டார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் செலுத்திய பணத்தை எல்லாம் ஆஜர் எதிரி எனது கடனுக்கு வரவு வைக்காமல் என்னை ஏமாற்றியுள்ளார் என்பதை தெரிந்துகொண்டேன் என நான் சொல்லியுள்ள சாட்சியம் வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. யார்மூலம் தெரிந்துகொண்டேன் என்பதை பிரிவு 81 விசாரணை அதிகாரியிடமோ காவல்துறையினரிடமோ நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

6) சங்க தலைவர் ஜெயந்தி எனது உறவினரா என்றால் இல்லை எனது நண்பர். சங்க தலைவர் ஜெயந்தி எனது உறவினர் என்றால் முதலில் நட்புதான் தற்போது உறவினர் ஆகியுள்ளார். நான் எனது உறவினரை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றவேண்டும் என்பதற்காக ஆஜர் எதிரிமீது பொய்யாக குற்றச்சாட்டினை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.